**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | **CC No.1548/2025** | Date | : | 05.08.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | |
| Name | : | செந்தில்குமார் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.08.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் ).

**அரசு தரப்பு முதல் விசாரணை**:

1. நான் தற்போது சித்தோடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.09.2024 ம் தேதியன்று 10.00 மணிக்கு நானும் உதவி ஆய்வாளர் பிரகாசம் மற்றும் காவலர் அஜித் ஆகியோரும் காவல்நிலைய சரகத்தில் மதுவிலக்கு குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும்பொருட்டு மதுவிலக்கு ரோந்து அலுவலின்பேரில் சித்தோடு நசியனூர் - பெருந்துறை ரோடு டாஸ்மார்க் அருகில் கண்காணித்தபோது ஒரு நபர் போலிஸ் பார்ட்டியை பார்த்தவுடன் திரும்பி செல்ல எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க, தனது பெயர் துரைராஜ், த/பெ. ராஜமாணிக்கம், நசியனூர், ஈரோடு என்று கூறினார்.

2. பின்பு அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை சோதனை செய்து பார்த்தபோது அதில் அரசு மதுபானமான சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை வைத்திருந்தார். பின்பு உதவி ஆய்வாளர் அவரை விசாரித்தபோது அரசு அனுமதியின்றி அரசு

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.05 07:55:06 +0530

மதுபானங்களை அதிக விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டவரை அன்றே 10.15 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார்.

3. பின்பு எதிரி ஆஜர் செய்த சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் மற்றும் அஜித்தும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், இரண்டாவது சாட்சி கையொப்பம் காவலர் அஜித் என்பவருடையதாகும். (**கைப்பற்றுதல் மகஜரில் முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. மேற்படி சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களைதான் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றினார். பின்னர் 11.00 மணிக்கு சித்தோடு காவல்நிலையம் சென்று குற்ற எண். 543/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

**1.** கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் அரசு மதுபான கடையில் வழங்கப்படும் மதுபான பாட்டில்கள் என்றால் சரிதான். எதிரி மதுபானங்கள் விற்பனை செய்வதாக காவல் நிலையத்திற்கு புகார் வந்ததா என்றால் இல்லை. மேற்படி மதுபானங்கள் எந்த கடையில் இருந்து வாங்கப்பட்டது என்பது குறித்து ரசீதுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.05 07:55:21 +0530

2. அதிக தொகைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறியுள்ள நிலையில் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்ய வைத்திருந்தார் என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மதுபானங்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் கவரை உதவி ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றினார். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றும் அவரிடம் இருந்து எந்த ஒரு மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் உதவி ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.05 07:55:27 +0530

Judicial Magistrate No.III,
Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.1548/2025 | Date | : | 05.08.2026 |
| Deposition of Witness for | : | அ.சா. 2 | Taluk | : | |
| Name | : | பிரகாசம் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.08.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை**:

1. நான் தற்போது சித்தோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வருகிறேன். கடந்த 01.09.2024 ம் தேதியன்று 10.00 மணிக்கு நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் மற்றும் காவலர் அஜித் ஆகியோரும் காவல்நிலைய சரகத்தில் மதுவிலக்கு குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும்பொருட்டு மதுவிலக்கு ரோந்து அலுவலின்பேரில் சித்தோடு நசியனூர் - பெருந்துறை ரோடு டாஸ்மார்க் அருகில் கண்காணித்தபோது ஒரு நபர் போலிஸ் பார்ட்டியை பார்த்தவுடன் திரும்பி செல்ல எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க, தனது பெயர் துரைராஜ், த/பெ. ராஜமாணிக்கம், நசியனூர், ஈரோடு என்று கூறினார்.

2. பின்பு அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை சோதனை செய்து பார்த்தபோது அதில் அரசு மதுபானமான சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை வைத்திருந்தார். அந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். பின்பு நான் அவரை விசாரித்தபோது அரசு அனுமதியின்றி அரசு மதுபானங்களை அதிக விலைக்கு

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.05 07:56:05 +0530

பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டவரை அன்றே 10.15 மணிக்கு நான் கைது செய்தேன்.

3. பின்பு எதிரி ஆஜர் செய்த சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் மற்றும் காவலர் அஜித் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. மேற்படி சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்களைதான் நான் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றினேன். பின்னர் 11.00 மணிக்கு சித்தோடு காவல்நிலையம் சென்று குற்ற எண். 543/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

பின்பு எதிரியை திரேகபரிசோதனை செய்து தக்க பாதுகாப்பில் வைத்து எதிரி பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்பு சாட்சிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் மற்றும் காவலர் அஜித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பெற்றேன். பின்பு கைப்பற்றப்பட்ட சொத்தினை படிவம் -91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**சுமார் 180ML பிடிக்கக்கூடிய EXPRESS BRANDY – 05 பாட்டில்கள் அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (**படிவம் 91 அ.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் JM 3 ஈரோடு அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2026.08.05 07:56:25 +0530

**குறுக்கு விசாரணை**

மதுபானங்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் கவரை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மதுபானங்கள் எந்த கடையில் வாங்கப்பட்டது என்பது குறித்து அதன் ரசீதை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி அதிக விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்கிறார் என்று பொதுமக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அதிக விலைக்கு எதிரியிடமிருந்து மதுபானம் வாங்கியதாக யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றும் அவரிடமிருந்து மதுபான பாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்காக புள்ளிவிவர கணக்குக்காக இந்த வழக்கு எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரி அல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.05 07:56:36 +0530

Judicial Magistrate No.III,
Erode.